கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 67/2024**

2025-ம் ஆண்டு மே மாதம் 28-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அன்பழகன் | வயது | 59 |
| தந்தை பெயர் | ராமசந்திரன் | ஜாதி | |
| தொழில் | இலட்சுமி நாராயணன் வங்கி உதவி மேலாளர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

( எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூர் ராஜா தெருவில் வசித்து இலட்சுமி நாராயணன் வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது சகோதரர் ஆவார். அசா.1 யை தெரியும் அவர் எனது குடும்ப நண்பர் ஆவார். கடந்த 24.12.2019 ம் தேதி இரவு 10.30 மணியளவில் எனது நண்பர் லோகநாதன் என் வீட்டிற்கு வந்து பேசிக்கொண்டிருந்தார். எனது தம்பி ராஜகோபாலுக்கும் எனக்கும் சொத்து சம்பந்தமாக அடிக்கடி தகராறு ஏற்படும். அந்த தகராரில் எனக்கு ஆதரவாக லோகநாதன் என்னுடன் இருப்பார். இதை மனதில் வைத்து கொண்ட எதிரி என் வீட்டின் வாசலில் நின்றுகொண்டு லோகநாதனை குச்சிகாரி தேவடியா மகனே நீ என்ன சப்போட்டா வெளியே வாடா என்று கூறினார். நான் லோகநாதனின் கையை பிடித்து போகவேண்டாம் என்று தடுத்தேன் அதற்கு லோகநாதன் நம்ம ராஜகோபால் தானே என்று கூறிகொண்டே ராஜகோபாலிடம் சென்றார். அப்போது ராஜகோபால் தன் கையில் மறைத்து வைத்திருந்த கட்டர் போன்ற கத்தியால் லோகநாதனின் இடது முன் கையிலும் மூக்கு பகுதியிலும் வலது கண்ணின் கீழ்பகுதியிலும் குத்தி கிழித்துவிட்டார். அதில் லோகநாதனுக்கு முகத்திலும் கையிலும் இரத்தமாக இருந்தது. லோகநாதன் வலிதாங்க முடியாமல் சத்தம் போடவே நானும் அருகில் உள்ளவர்களும் வரவே ராஜகோபால் கத்தியை காட்டி லோகநாதனை பார்த்து இனியும் நீ சப்போட் பண்ணா உன்னை கொன்று விடுவேன் என்று மிரட்டி விட்டு அங்கிருந்து ஓடிவிட்டார். காயம் பட்ட லோகநாதனை நான் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் நான் கூறியதை தான் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். ராஜா தெருவில் தான் நானும் எனது தம்பியும் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். ராஜா தெருவில் நான் வசிக்கும் வீடும் எதிரி வசிக்கும் வீடும் எனது அப்பா சம்பாதித்த சொத்து என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு மேற்படி இரண்டு வீடு மற்றும் கொல்லையை தவிர்த்து வேறு சொத்து இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் எனது அ னுபவத்திலும் எதிரி அனுபவத்திலும் உள்ளது என்றால் சரிதான். எங்கள் இருவரையும் தவிர்த்து மூன்று சகோதரிகள் உள்ளனர் என்றால் சரிதான். அவர்களுக்கு எனது அப்பா சொத்தில் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் எங்கள் இருவருக்கும் உயிலாக எழுதி வைத்தார் அது பதிவு செய்யப்படாத உயிலாகும். எனது சகோதரிகளுக்கு சொத்து சம்பந்தமாக என்னிடம் பொய்யாக உயில் தயாரித்தீர்களா என்று கேட்கும் போதெல்லாம் நான் நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுப்பேன் என்றால் சரியல்ல. நான் நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததில்லை. என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அசா. 1 ற்கு வேறு விதமாக ஏற்பட்ட காயத்தை சொத்து பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு எதிரி மூலமாக ஏற்பட்டது என்று பொய் புகார் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல. நான் கூறுவது போல எதிரி திட்டவும் இல்லை தாக்கவும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.05.28 17:57:25 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்,

திருவாரூர்

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 67/2024**

2025-ம் ஆண்டு மே மாதம் 28-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லோகநாதன் | வயது | 59 |
| தந்தை பெயர் | சோமஸ்கந்தன் | ஜாதி | |
| தொழில் | சுயதொழில் | மதம் | |
| ஊர் | மன்னார்குடி | தாலுக்கா | |

( எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்பொழுது மன்னார்குடியில் வசித்து சுயதொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது நண்பர் அன்பழகனின் உடன் பிறந்த சகோதரர் ஆவார். எனது நணபர் அன்பழகனுக்கும், அவரது தம்பி ராஜகோபாலுக்கும் சொத்து தகராறு காரணமாக அன்பழகன் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும்போது அவர் எனது நண்பர் என்ற காரணத்தினால் அவருடன் நான் காவல் நிலையம் செல்வேன். அதில் கோபம் கொண்ட அன்பழகனின் தம்பி ராஜகோபால் கடந்த 24.12.2019 ம் தேதி இரவு 10,10.30 மணியளவில் நான் அன்பழகன் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது அன்பழகன் வீட்டு வாசல் முன்பாக நின்றுகொண்டு என்னை குச்சிகாரி, தேவடியா மவனே நீ வெளியே வாடா என்று சத்தம் போட்டார். அது அன்பழகன் தம்பி ராஜகோபால் சத்தம் போட்டார். அவர் எனக்கு நன்கு தெரியும் என்பதால் அவரை சமாதானம் செய்து விடலாம் என்று எண்ணி நான் அவருக்கு அருகில் சென்றேன். ராஜகோபால் தன் கையில் வைத்திருந்த கத்தியால் எனது இடது முன்கையில் இரண்டு இடத்தில் குத்திவிட்டார். பின்னர் எதிரி ராஜகோபால் வலது கண் கீழ் பகுதியிலும், இடது பக்க நெற்றிலும் கத்தியால் கிழித்து விட்டார். ( சாட்சி தனக்கு ஏற்பட்ட காயத்தழும்பை நீதிமன்றத்தில் காண்பித்தார்) பின்னர் அருகில் இருந்த அன்பழகன் மற்றும் தெரு வாசிகள் எனது அலறல் சத்தத்தை கேட்டு வந்தவுடன் எதிரி ராஜகோபால் அங்கிருந்து ஓடிவிட்டார். என்னை அன்பழகன் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். அங்கு நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம்

என்னுடையது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒரு நாள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒரு நாள் சிகிச்சையில் இருந்தேன். தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எனக்கு நரம்பு கிழிந்து விட்டது அதற்கான அறுவை சிகிச்சையும், தையலும் போட்டார்கள். பின்னர் நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அன்பழகன் எனக்கு சிறுவயது முதலே பழக்கம் என்றால் இல்லை. கடந்த 20 ஆண்டுகளாக பழக்கம். அன்பழகன் உடன் பிறந்தவர்கள் எதிரி மற்றும் 3 சகோதரிகள் என்றால் சரிதான். அன்பழகனும் எதிரியும் குடியிருக்கும் வீடு அவர்களின் அப்பா சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அன்பழகன் குடும்ப சொத்தை எதிரிக்கும், அவரது சகோதரிகளுக்கும் கொடுக்காமல் பிரச்சனை செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் அன்பழகன் குடும்ப பிரச்சனை தொடர்பாக காவல் நிலையம் சென்று வந்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ளது மேற்படி குடும்ப சொத்து பிரச்சனை சம்பந்தமாக என்றால் சரிதான். பிரச்சனை நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் எதிரி வீட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். என்ன வகையான் கத்தியால் தாக்கப்பட்டேன் என்று போலீசார் விசாரித்தார்கள் என்றால் இல்லை எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் நகர காவல் நிலையத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடம் நெருக்கமான குடியிருப்புகள் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடனே போலீசார் சம்பவ இடம் வந்தனரா என்றால் இல்லை. எனது அலறல் சத்தம் கேட்டு யார் யார் வந்தார்கள் என்று எனது புகார் வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் கூறியது போல சம்பவம் எதுவும் நடந்திருந்தால் போலீசார் வந்திருப்பார்கள் என்றாலும் நான் அக்கம் பக்கத்தினர் பெயர் குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளித்திருப்பேன் என்றாலும் சம்பவம் நடக்காத காரணத்தினால் தான் போலீசார் வரவில்லை என்றாலும் நான் பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி கிறிஸ்மஸ் தினம் என்பதால் போலீசார் ரோந்து பணியில் இருப்பார்கள் என்றால் இருந்திருக்கலாம் எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்தில் இன்று சாட்சியம் அளிக்க வேண்டும் என்று அன்பழகன் என்னிடம் தெரிவித்தார் என்றால் சரிதான். அன்பழகனுக்கும் எதிரிக்கும் தீர்க்கப்படாத குடும்ப பிரச்சனை இருப்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் புகார் அளித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் அளித்த பின்னர் போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் போனில் அழைத்து சமாதானமாக செல்கிறீர்களா என்று

ஒரு முறை கேட்டார்கள். நான் கூறுவது போல எதிரி என்னை திட்டவும் இல்லை கத்தியால் தாக்கவும் இல்லை எதிரி நிரபராதி என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

S CINTHA Digitally signed by S CINTHA DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91 Date: 2025.05.28 17:57:34 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்,

திருவாரூர்